தெரிவித்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலே புதிதாக நிலம், தோட்டம் முதலியன கொடுத்து அகதிகளைப் புனரமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாடு

* 472 வினா: திரு. எஸ். ராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு வேளாண்மைதுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1968–ல் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் தனி உணவு மண்டலங்களை எடுத்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா ?

(இ) ஆமெனில், தமிழ்நாடு அரசின் சார்பில் அதுபற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) மாநாட்டின் போது அறுதியிட்டுப் பரிவுரை எதும் செய்யப்படவில்லை. மண்டல முறை குறித்துப் பொதுவாக விவாதிக்கப்பட்டது. அந்த விவாதத்தில் பல மாநிலங்களின் முதலமைச்சர்களும் உணவு அமைச்சர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

(இ) நெல், அரிசி சம்பந்தமாகத் தற்போதுள்ள தனி-மாநில மண்டலமே (Single-State Zone) தொடர்ந்து நீடித்திருப்பதற்குச் சாதகமாக உணவு அமைச்சரவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவரவர்களே தனி உணவு மண்டலமாகத் தமிழகம் இருப்பதால்தான் ஓரளவிற்கு உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும், பற்றாக்குறையைப் போக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இத்தகைய ஏற்பாட்டை நிரந்தரமான அமைப்பாக ஆக்கக்கூடிய அளவில் இந்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தக் கருத்தை மாநாட்டிலே வற்புறுத்தியிருக்கிறது. தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கும் அந்த நிலைதான் இப்பொழுது இருக்கிறது.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : சார், கிராமத்திற்குக் கிராமம் கூட உணவு நடமாட்டத் தடை இருந்து வருகிறது. இதனால் பஞ்ச காலத்திலே உணவுப்பொருள்கள் வெளிச்சந்தையில் கிடைப்பது அரிதாகி மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். மாநிலம் முழுவதையும் ஒரு உணவு மண்டலமாக ஆக்கி, மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம் இருக்கும் தடைகளை நீக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இந்தக் கருத்தை சுதந்திரா கட்சி வலுவாக வலியுறுத்தி வருகிறது. (குறுக்கீடு) நான் கட்சியின் கொள்கை என்றுதான் சொன்னேன். தவறாக ஒன்றும் சொல்லவில்லை. மாவட்டத்திற்கு மாவட்டம் கட்டுப்பாடு இருந்தாலன்றி, உபரியாக இருக்கும் மாவட்டத்திலிருந்து பற்றாக்குறை மாவட்டத்திற்குக் கிடைப்பதற்குக் கெடுதல் ஏற்பட ஏதுவாக இருக்கும். அதனால் பல தவறுகள் ஏற்படவும், அரசாங்கத்திற்கு உணவு நெருக்கடியைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படவும் வழியிருப்பதால் இந்தக் கட்டுப்பாடு தேவையாகிறது. பற்றாக்குறை மாவட்டங்களுக்கு எங்கே உபரியாக விளைகிறதோ அங்கிருந்து அரசு கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 473, திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்.

Thiru N. S. V. Chithan : I am not putting the question.